**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR**

**DEPOSITION OF WITNESS**

**R.W.1**

**MCOP No.  47/2020**

| | |
|---|---|
| **Name** | **: பெரியசாமி** |
| **Father's Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **: SSI** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 13.02.2025.**

**எ.ம.சா.1 முதல் விசாரணை:-**

1) நான் நீதிமன்றத்தில் இருந்த வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது தம்மம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். மேற்படி விபத்து வழக்கு சம்பந்தப்பட்ட குற்ற எண். 26/2019 என்ற வழக்கு கோப்பு சம்பந்தமாக சாட்சியம் அளிக்க காவல் ஆய்வாளர் அனுமதி கடிதம் கொடுத்துள்ளார். அது எ.ம.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) இந்த வழக்கின் சம்பந்தப்பட்ட இரு வாகனங்களும் டாடா எசி தான். TN77-3532 என்ற வாகனத்தின் மீது தான் புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இறுதி அறிக்கையும் மேற்படி வாகனத்தின் மீது தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விபத்திற்கு காரணம் மேற்படி வாகனம் என்று விசாரணையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். TN 77B 6823 என்ற வாகனம் நின்று கொண்டிருந்த வாகனம்.

3)அதன் மீது பின்னால் மோதி தான் விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கு காப்பீடு இல்லை. மேற்படி வழக்கு சம்பந்தப்பட்ட முதல் தகவல் அறிக்கை, புகார், மாதிரிவரைப்படம், வாகன ஆய்வறிக்கை 2, இறுதி அறிக்கை 2 ஆகியவை எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி 1ம் எதிர்மனுதாரர்

வாகனத்தின் மீது தான் முதல் தகவல் அறிக்கை, இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை**

4) TN77B6823 ல் கமலம் என்பவர் காய்கறி வாங்கி கொண்டு இருக்கும் பின்னால் வந்த வாகனம் மோதி தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்று முதல் தகவல் அறிக்கையில் கண்டுள்ளது. அதில் அடிப்பட்ட கமலம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நின்று கொண்டு இருந்த TN77B6823 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் Rear Load Body Door Damaged என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.

5) மேற்படி காய்கறி வாங்கிகொண்டிருந்த கமலம் மேற்படி இரண்டு வாகனத்தின் நடுவில் சிக்கி இறந்துவிட்டாக கண்டுள்ளது என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம், தகுதி சான்று, காப்பீடு இல்லை என்று எம்.வி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்றப்பத்திரிக்கையில் 279, 304(எ) இ.த.ச. பிரிவின் படி தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றப்பத்திரிக்கையில் ஓட்டுநர் உரிமம், தகுதி சான்று, காப்பீடு இல்லை என்பதற்கான பிரிவுகளில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

6) மோட்டார் வாகன சட்டப்படி காப்பீடு இல்லை என்றால் மேற்படி வண்டியை கைப்பற்றி அதை பற்றி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அனுப்பி, விற்பனை செய்து அந்த தொகையை நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு உள்ளது என்றும், அதன் அடிப்படையில் எவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஆவண குறிப்பு எதுவும் இல்லை.

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.02.13 18:21:09 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**